**கவனிக்க.-** *20.06.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1869 - 2014 ජූනි මස 27 වැනි සිකුරාදා - 2014.06.27

*1869 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *958* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *962* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2014, யூலை மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூலை மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

### துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், கப்பற்றுறை அமைச்சு

துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், கப்பற்றுறை அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடமொன்றை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*1.* ***ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.***- *இந்த அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேற்றின் மீது ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்களிலிருந்து வெற்றிட எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 6 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் திட்டத்திற்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.*

*2.* **தேவையான தகைமைகள் :**

(i) *கல்வி/தொழிற்றகைமைகள்.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் சட்டம் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல்/ உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.*

(ii) *அனுபவம்.- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர், மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான தொழில்சார் அனுபவம் இருத்தல்.*

(iii) *உடற்தகுதி.- விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.*

(iv) *பிற தகைமைகள் :*

* விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றுக்கு அல்லது அதற்கு முன்னர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமை களை எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
* ஆங்கில மொழித்தேர்ச்சி மேலதிக தகைமையாகும்.

*3.* **பணிக்கமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனை களும் :**

(i) *இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையது மாகும். விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தல் வேண்டும்.*

(ii) *இந்த நியமனம் 3 வருடங்களைக் கொண்ட தகுதிகூர் நிலைக்கு உட்படுத்தப்படும். சட்ட உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (3) வருட காலத்திற்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.*

(iii) *2014.01.21 ஆந் திகதியிடப்பட்டதும் 01/2014 ஆம் இலக்கத் தைக் கொண்டதுமான பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக பதவியில் இணைந்து ஐந்து (5) வருட காலத்திற்குள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் உரிய தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதோடு, அரச கரும மொழியல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களினால் தகுதிகூர் காலப்பகுதியில் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெறுதல் வேண்டும்.*

(iv) *அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்கத்தின் நிதி நியதி களுக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்படும்.*

*4.* ***வயதெல்லை.***- *விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்றுக்கு 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*5.* ***சம்பள அளவுத்திட்டம்.***- *இந்தப் பதவிக்கு ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (எஸ்எல்- 1- 2006) கொண்ட சம்பள அளவுத் திட்டம் உரியதாகும். (2006.04.25 ஆந் திகதியிடப்பட்டதும் 6/2006 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான பொது நிர்வாக சுற்றறிக்கையில் உள்ள எஸ்எல் - 1-2006 சம்பள வகுதியாகும்.)*

*6.* **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குப் பின்வரும் புள்ளி வழங்கும் திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படும் :-**

| | விடயம் | | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் | | 20 |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பெற்ற சட்டம் பற்றிய பட்டம் | | |
| | முதலாவது வகுப்பு பட்டம் | 20 | |
| | இரண்டாவது வகுப்பு உயர் மட்ட பட்டம் | 15 | |
| | இரண்டாம் வகுப்பு கீழ்மட்ட பட்டம் | 10 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டின் முதலாம் வகுப்பு சித்தி | 15 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டின் இரண்டாம் வகுப்பு சித்தி | 10 | |

| | விடயம் | | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | குறிப்பு.- கௌரவ சித்தியுடனான இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தால் மாத்திரம் 10 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும். | | |
| | (ஆகக்கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் - பட்டம் அல்லது சட்டக் கல்லூரித் தகைமைகளில் ஒன்றுக்கு மாத்திரம்) | | |
| 2 | மேலதிக தொழிற் தகைமைகள் | | 15 |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் இயைபுள்ள துறை தொடர்பில் ஒரு வருடத்திற்குக் குறையாத பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது பட்டப்பின் படிப்பு சட்ட டிப்ளோமா பாடநெறியொன்றுக்கு (டிப்ளோமா ஒன்றுக்கு 5 புள்ளிகள் வீதம்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் இயைபுள்ள துறை தொடர்பில் ஆறு (6) மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறி (டிப்ளோமா ஒன்றுக்கு 3 புள்ளிகள் வீதம்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் இயைபுள்ள துறை தொடர்பில் மூன்று (3) மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறி (பாடநெறி ஒன்றுக்கு 2 புள்ளிகள் வீதம்) | | |
| 3 | மேலதிக அனுபவம் | | 30 |
| | சட்டத்தரணி ஒருவராக அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் பெற்ற அனுபவம் - ஆறு மாதங்களுக்குக் கூடுதலாக ஒரு வருடத்திற்குக் குறைவாக - புள்ளிகள் 2<br>ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடுதலாக 30 புள்ளிகள் | | |
| | (அடிப்படைத் தகைமைகளைப் பெறுவதற்குத் தேவையான சட்டத்தரணி ஒருவராகச் செயலாற்றிய மூன்று (3) வருட சேவைக்காலத்தைத் தவிர)<br>(இருபது (20) வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த சட்டத்தரணி ஒருவரின் அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவரின் அல்லது நீதிபதி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழின் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.) | | |
| 4 | கணினி ஆற்றல் | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டப் படிப்புக்காக தகவல் தொழில்நுட்பத்தை முதன்மைப் பாடமொன்றாகக் கற்றிருத்தல். | 15 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு (1) வருடத்திற்குக் குறையாத தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா பாடநெறி அல்லது 1,500 மணித்தியாலங்கள் | 10 | |

| | விடயம் | | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில் நுட்பம் பற்றிய சான்றிதழ் பாடநெறி-<br>- ஆறு (6) மாதங்கள்/720 மணித்தியாலங்கள்<br>- மூன்று (3) மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 07<br>05 | |
| 5 | ஆங்கில மொழித் தேர்ச்சி | | 15 |
| | ஆங்கில மொழி மூலம் கற்ற பட்டப்பின் படிப்பு/பட்டம்/பட்டப்பின் படிப்பு சட்டம்/சட்ட பட்டம் (இயைபுள்ள பரீட்சை வினாத்தாள்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழி மூலம் விடையளித் திருத்தல் வேண்டும்.) | 15 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா பாடநெறி<br>ஒரு (1) வருடம் அல்லது 1,500 மணித்தியாலங்கள் | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி பற்றிய சான்றிதழ் பாடநெறி-<br>ஆறு (6) மாதங்கள்/720 மணித்தியாலங்கள்<br>மூன்று (3) மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 07<br>05 | |
| 6 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | | 5 |
| | மொத்தம் | | 100 |

7. **விண்ணப்பதாரிகளின் ஆள் அடையாளம்**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளும் உரிய வகையில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

(i) விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் 2014.07.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், "பணிப்பாளர் அதிபதி, வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதியின்

அலுவலகம், இலக்கம் 43/89, பிறிஸ்ரல் கட்டடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 1" என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவம் இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை ஏ4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதற் பக்கத்தில் இலக்கம் 1 இலிருந்து 7 வரையும் இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 8 இலிருந்து 12 வரையும் மூன்றாம் பக்கத்தில் இலக்கம் 13 வரையும் தயாரித்து தமது கையெழுத்தில் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் (நிரந்தர) பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் உள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் அல்லது 22,935 ரூபாவை மாதாந்த திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்கத்தின் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(v) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை இயைபுள்ள திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(vi) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது காலதாமதமாதல் பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்.**- தங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவலொன்று பிழையானது அல்லது உண்மையற்றதென ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் தங்களுடைய விண்ணப்பத் தகைமை இரத்துச் செய்யப்படும். அத்தகைய பிழையான அல்லது உண்மையற்ற தகவலொன்று ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இதற்குரிய நடவடிக்கைகளுக்குட்பட்டு பதவி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்பும் அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு.

துறைமுக அலுவலகம்,
இலக்கம் 19, சைத்திய வீதி,
கொழும்பு 1.
2014, யுன் 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

**துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், கப்பற்துறை அமைச்சின் வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதியின் அலுவலகத்தில் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.
முதலெழுத்துக்கள் பெயரின் பின்னால் வரும் விதத்தில் விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :
(அ) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ஆ) சொந்த முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
செல்லிடத் தொலைபேசி இலக்கம் :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

4. விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்றுள்ளவாறான வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. பால் (ஆண்/பெண்) :----.

7. திருமணமானவரா/திருமணமாகதவரா/விதவையா ? :----.

8. கல்வித் தகைமைகள் :

(அ) சட்டம் பற்றிய பட்டம் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழகம், திகதி, மொழி மூலம் :----.
(ஆ) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராகச் சத்தியப் பிரமாணம் செய்த திகதி :----.

9. தொழில் தகைமைகள் :

| பரீட்சை/ டிப்ளோமா | வருடம் | பாடம் | சித்தி | நிறுவனத்தின்/ பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. அனுபவம் தொடர்பான விபரங்கள் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவைக்காலம் |
|---|---|---|
| | | |

11. கணினி ஆற்றல் தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :-
  (அ) பட்டம் :----.
  (ஆ) டிப்ளோமா :----.
  (இ) சான்றிதழ் பாடநெறி :----.

12. ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :-
  (அ) பட்டம் :----.
  (ஆ) டிப்ளோமா :----.
  (இ) சான்றிதழ் பாடநெறி :----.

13. தாங்கள் ஏதேனும் குற்றமொன்று தொடர்பில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதாவது நியமனம் வழங்க முன்னர் உண்மையற்றவை யென அல்லது பிழையானவையெனத் தெரியவந்தால் அதன் காரணமாக நான் இந்தப் பதவிக்குத் தகுதியற்றவனாவேன் என்பதையும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் இந்தத் தவறு தெரியவந்தால் எந்தவித நட்டஈடும் வழங்கப்படாமல் சேவை யிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**
(ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் கடமையாற்றும் திரு./திருமதி/செல்வி ................................ தற்போது .............................. பதவியில் சேவையாற்றுகின்றார் எனவும் அவருடைய வேலை, நடத்தை திருப்திகரமானதெனவும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லையெனவும் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கவில்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ இலச்சினையும்.

திகதி :----.

6-785

---

## பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவின் ஹாலிஎல பிரிவின் மாளிகாதென்ன பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல் வர்த்தமானி அறிவித்தலினை இரத்துச் செய்தல்

2014.06.06 ஆந் திகதிய 1866 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் விண்ணப்பம் கோரல் அறிவித்தல் இத்தால் இரத்துச்செய்யப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, யூன் 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | ஹாலிஎல | பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல பிரிவின் மாளிகாதென்ன பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

6-680

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

### உதவி விடுதி மேற்பார்வையாளர் (ஆண்/பெண்) மற்றும் உதவி மாணவர் விடுதி பொறுப்பாளர் (ஆண்/பெண்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய பாடசாலைகளுக்கான விடுதி மேற்பார்வையாளர் (ஆண்/பெண்) பதவிகளுக்கும் தேசிய கல்விக் கல்லூரிகளில் மாணவர் விடுதிப் பொறுப்பாளர் (ஆண்/பெண்) பதவிகளுக்கும் இணைத்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்குறிப்பிடப்பட்ட உதவி விடுதி மேற்பார்வையாளர் (ஆண்/பெண்) பதவி வெற்றிடங்கள் தேசிய பாடசாலைகளில் நிலவும் அதே வேளை உதவி மாணவர் விடுதிப் பொறுப்பாளர் (ஆண்/பெண்) பதவி வெற்றிடங்கள் தேசிய கல்விக் கல்லூரிகளிலும் நிலவுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு ஏற்ப திறமை அடிப்படையில் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் நியமனத்துக்காகத் தெரிவுசெய்யப் படுவர். பரீட்சை கொழும்பு நகரத்துக்கு அண்மையில் அமையப்பெறும் பரீட்சை நிலையங்களில் இடம்பெறும்.

3. **சம்பளம்**.- இலக்கம் 06/2006 (iv) 2007.08.24 ஆந் திகதியுடைய பொது நிர்வாகச் சுற்றுநிருபத்துக்கு அமைய முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) அற்ற பகுதி. 2 சேவை வகையில் III, II மற்றும் I தரங்களுக்கான சம்பளத் திட்டம்.- ரூ. 13,120-10 x 145-11 x 170-10 x 240-10 x 320-ரூபா 22,040. ரூ. 14,570 ஐத் தாண்டுவதற்கு II ஆம் தரத்துக்கு பதவி உயர்வு பெறுதலும், ரூ. 16,440 ஐத் தாண்டுவதற்கு முதலாம் தரத்துக்கு பதவி உயர்வுபெறுதலும் வேண்டும்.

4. **பதவியின் தன்மை**.- நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

5. **கல்வித் தகைமைகள்**.- சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் உட்பட மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

கல்விப் பொதுத்தராதர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தி பெற்றிருத்தல்.

6. **உடற் தகைமைகள்**.- சிறந்த தேகாரோக்கியம் மற்றும் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கான போதுமான உடற்பொருத்தப்பாட்டினைக் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;
(ii) விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் ;
(iii) தகுதி பெறும் தினம்.

பதவிக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் பெற்றிருக்கும் தினம் என ஏற்றுக் கொள்ளப்படுவது விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட சகல தகைமைகளையும் பெற்றிருக்கும் தினமாகும். இத்தினம் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியாகவோ அல்லது அதற்கு முன்னரான தினமொன் றாகவோ இருக்க வேண்டும்.

8. **வயது**.- குறைந்த வயதெல்லை 18 வருடங்கள். கூடிய வயதெல்லை 30 வருடங்கள்.

9. **பரீட்சை முறைமை**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய ஊடகங்களில் நடைபெறும். அதே வேளை விண்ணப் பிக்கும் ஊடகம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| | | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| (i) | பொது அறிவு | 100 | 1 மணித்தியாலம் |
| (ii) | சிங்களம்/தமிழ்மொழி | 100 | 1 மணித்தியாலம் |

சித்திபெறுவதற்கு ஒவ்வொரு விடயத்திலும் குறிப்பிடப்பட்ட மொத்தப் புள்ளித் தொகையில் குறைந்தது 40% பெற்றிருத்தல் வேண்டும்.

*பொது அறிவு*.- பதவிக்குப் பொருத்தமான கடமைகளைச் செய்வதற்கு அவசியமான சாதாரண அறிவைப் பரீட்சிப்பதற்காக தயார் செய்யப்பட்ட பல்தேர்வு வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாகும்.

*பொது அறிவு வினாப்பத்திரத்தின் சாராம்சம்*.- விடுதி மாணவர்களின் ஒழுக்கம், பாதுகாப்பு, நலன்புரி மற்றும் உணவு பரிமாறல் போன்ற விடயங்களைச் செய்வது பற்றி மாணவர் விடுதிப் பொறுப்பாளருக்கு ஒத்துழைப்பு வழங்கல்.

விடுதி மாணவ மாணவிகளின் (நலன்கள்) விடுதி மாணவ மாணவிகளின் பொறுப்பாளராகக் கடமை புரிதல், ஒழுக்கத்தைப் பேணுதல், உணவுப் பொருட்களை விலைக்கு வாங்குவதற்குத் தேவையான புத்தகங்கள், பதிவேடுகளைப் பேணல், உணவுப் பொருட்களை விலைக்கு வாங்கல், பாதுகாத்தல் மற்றும் சமையலறைக்கு விநியோகித்தல் பற்றிய வேலைகள், உணவு, பானம் சமைத்தல் பற்றி பரீட்சித்தல், சமையலறையின் பரிசுத்த தன்மை, விடுதியைச் சுத்தமாக வைத்திருத்தலுக்கான திட்டங்களை வகுத்தல், நோயுற்ற மாணவர்கள் சம்பந்தமான கடமைகள் (முதலுதவி பெற்றுக்கொடுக்கும் கடமைகள்), அரச உடைமைகள், மாணவர் உடைமைகளைப் பாதுகாத்தல் பற்றிய கடமைகள், நேரசூசியை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைகள், விடுதிகளில் தண்ணீர், மின்சாரம் ஒழுங்காக விநியோகிப்பதற்கான வேலைகள் விடுதியாளர்கள் விடுதியை விட்டு வெளியேறிச் செல்லுதல் மற்றும் வரவு பற்றிப் பொறுப்பான விடயங்கள்.

*சிங்களம்/தமிழ்மொழி*.- விண்ணப்பதாரிகள் கருத்துக்களை வெளிப்படுத்துதல் (நுட்பம், எழுத்தொலி வேறுபாடுகள், இலக்கணப் பாவனை பற்றிப் பரீட்சிப்பதற்காக தயார் செய்யப்பட்ட வினாப்பத்திரம் (சிங்களம்/தமிழ் க. பொ. த. (சாதாரண தர) மட்டம்) எல்லா வினாக்களுக்கும் வினாப்பத்திரத்திலேயே விடையளிக்கும் வகையில் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

9.1 *பெறுபேறுகள் வெளியிடுதல்*.- ஒவ்வொரு விடயத்திலும் 40% புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்று சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் திறமைகள் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் உள்ளடங்கப்பட்ட பெறுபேறுகள் பதிவேடொன்று கல்வி அமைச்சின் செயலாள ருக்குப் பெற்றுக்கொடுக்கப்படும். அதற்கு மேலதிகமாக பரீட்சைக்குத் தோற்றிய எல்லா விண்ணப்பதாரிகளுக்கும் ஒவ்வொரு விடயங்களிலும் பெற்றுக்கொண்ட புள்ளிகள், மொத்தப் புள்ளிகள் அடங்கிய பெறுபேற்றுப் பதிவேடொன்று தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொடுக்கப்படும்.

10.

10.1 *வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பு*.- மேற்கூறப்பட்ட பதவிக்காகக் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைய அவ்வெற்றிடம் கொண்ட தேசிய பாடசாலை அல்லது தேசிய கல்விக் கல்லூரிக்கு நியமனம் வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தில் தாம் நியமனம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் 3 சேவை இடங்கள் முன்னுரிமை தொடர்பில்

குறிப்பிடப்பட வேண்டும். தாங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமை பெறும் பட்சத்தில் நியமிக்கப்படும் சேவை இடத்தில் 5 வருடங்களைவிட குறையாத சேவைக்காலம் சேவையாற்ற கட்டுப்பட வேண்டும்.

வெற்றிட ஆவணம் - தேசிய பாடசாலை - இணைப்பு 1
வெற்றிட ஆவணம் - தேசிய கல்விக் கல்லூரி - இணைப்பு 2

10.2 *விண்ணப்பிக்கும் முறை.-* இவ்வறிவித்தலின் இறுதியில் இருக்கும் மாதிரிப் படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பிழையின்றிப் பூர்த்திசெய்து 2014.07.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அடங்கியுள்ள கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப்பெயர் பொருத்தமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்தின் தொடர் இலக்கம் 1 இல் இருந்து 8.1 வரை முதற்பக்கத்திலும் 8.2 இல் இருந்து மிகுதிப் பகுதி இரண்டாம் பக்கத்துக்கும் வருமாறு தயாரிக்கப்பட வேண்டிய அதேவேளை அதற்குரிய தகவல்கள் தனது கையெழுத்தினால் தெளிவாக உள்ளடக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு (அனுகூலமற்ற) மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணத்துவமற்ற தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல்கள் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரி தன்வசம் வைத்துக் கொள்வது பயனளிக்கும் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப் படும்போது அங்கு தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர், சிங்கள மொழி மூல விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் அவசியமாகும்.

10.3 *பரீட்சைக் கட்டணம்.-* பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். இத்தொகையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலோ அல்லது மாவட்டச் செயலாளர் அலுவலகத்திலோ செலுத்த முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை பின் தேவைக்காக தம்வசம் வைத்துக்கொள்ளவும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. அதேவேளை காசுக் கட்டளையோ முத்திரையோ ஏற்கப்படமாட்டாது.

11. விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதி செய்வதற்கு கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் முன்வைக்க வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைத்த அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வதாக அமையாது. பரீட்சை நடைபெறுவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படுதல் வேண்டும். அத்தகைய சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட உடன் அது பற்றி செய்திப் பத்திரிகைகளில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்களின் பின் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதி, பதிவுத்தபால் பற்றுச்சீட்டு கொழும்புக்கு வெளிப்பிரதேசமானால் அனுமதிப்பத்திரம் அனுப்பக் கூடிய தொலைநகல் இலக்கம் போன்றவற்றைக் குறிப்பிட்டு உமது வேண்டுகோள் கடிதமொன்றை இலங்கைப் பரீசைத் திணைக்களத்துக்கு தொலைநகல் மூலம் அறியத்தருவது மிகவும் பயனுள்ளதாகும்.

13. சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பொதுப்பரீட்சை சட்டதிட்டங்களுக்கேற்ப கருமமாற்ற கடமைப்பட்டுள்ளீர்கள். இவ்வறிவித்தலில் குறிப்பிடாப்படாத விடயம் பற்றி தீர்மானிக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்கு உண்டு.

அனுர திசாநாயக்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுறுபாய",
பெலவத்தை,
பத்தரமுல்ல.
2014, யூன் 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

உதவி விடுதி மேற்பார்வையாளர் (ஆண்/பெண்) மற்றும் உதவி மாணவர் விடுதி பொறுப்பாளர் (ஆண்/பெண்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

Open Competitive Examination for Recruitment to the posts of Assistant Matron (Male/Female) and Assistant Hostel Superintendent (Male/Female)

(அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்)

விண்ணப்பிக்கும் பதவி (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

| | |
|---|---|
| உதவி விடுதி மேற்பார்வையாளர்-ஆண்/பெண் | 1 |
| உதவி மாணவர் விடுதிப் பொறுப்பாளர்-ஆண்/பெண் | 2 |
| உதவி விடுதி மேற்பார்வையாளர்-ஆண்/பெண் மற்றும் உதவி மாணவர் விடுதிப் பொறுப்பாளர்-ஆண்/பெண் | 3 |

பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

1. 1.1 முதலெழுத்துக்களைப் பின்னால் இட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : SUNIL, J.M.U

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி :----.

2.2 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. 3.1 பெண்/ஆண் (பெண்-1, ஆண்-0) ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

6. வதியும் மாகாணம் :----.

7. வதியும் மாவட்டம் :----.

8. கல்வித் தகைமைகள் :

8.1 க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சை பற்றிய விபரம் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் | வருடம் |
|---|---|---|
| | | |

8.2 க. பொ. த. (உயர்தரப்) பரீட்சை பற்றிய விபரம் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் | வருடம் |
|---|---|---|
| | | |

9. தொழிற்தகைமை :----.

10. அனுபவம் :----.

11. வேறு தகைமைகள் :----.

12. நியமனம் பெற்றுக்கொள்ள எதிபார்க்கப்படும் சேவைத்தளம் :

| முன்னுரிமை தொடர் இல. | சேவைத் தளம் | |
|---|---|---|
| | தேசிய பாடசாலை | கல்விக் கல்லூரி |
| 1.<br>2.<br>3. | | |

13. நீங்கள் எப்பொழுதாவது ஏதாவது குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :----.

14. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :----.

14.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.

14.2 பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.

14.3 செலுத்திய தொகை :----.

(பற்றுச்சீட்டு கழறாதவாறு இங்கு ஒட்டவும்.)

15. **விண்ணப்பதாரியின் உறுதிமொழி :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவையும் பிழையற்றவையும் என உண்மையாக வெளிப்படுத்து கிறேன். இங்கு ஏதாவது ஒரு பகுதி பூரணப்படுத்தப் படாமலோ அல்லது பிழையாக பூரணப்படுத்தப்படுவ தாலோ ஏற்படக்கூடிய நட்டத்தை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக் கிறேன். மேலும் இங்குள்ள சகல பகுதிகளையும் பிழை யின்றிப் பூரணப்படுத்தியுள்ளமையை உறுதிப்படுத்து கிறேன்.

(ஆ) என்னால் தரப்பட்ட தகவல்கள் உண்மையற்றது என தெரியவரின் நியமனம் பெறுவதற்கு முன்னதாயின் தகுதியற்றவனாக ஆவேன் எனவும், நியமனம் பெற்ற பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடப்படும் சட்டதிட்டங் களுக்கு கீழ்ப்படிவேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவல்களையும் பின்னர் மாற்றமாட்டேன் எனவும் உறுதி கூறுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர் என் முன்னிலையில் ........................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையை இடவும்.)

இணைப்பு 1

**வெற்றிடம் காணப்படும் தேசிய பாடசாலைகள் - உதவி வதிவிட நிருவாக பதவி**

**மேல் மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. பிரின்ஸ் ஒப் வேல்ஸ் மகா வித்தியாலயம் - மொரட்டுவை
2. ஹங்வெல்ல ராஜசிங்க மகா வித்தியாலயம் - ஹங்வெல்ல
3. றோயல் கல்லூரி - கொழும்பு 7
4. ஆனந்தா கல்லூரி - கொழும்பு 10
5. நாலந்தா கல்லூரி - கொழும்பு 10
6. தக்சிலா மத்திய கல்லூரி - ஹொரணை
7. அல் ஹிமைசரா மத்திய மகா வித்தியாலயம் - பேருவளை
8. சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மத்திய மகா வித்தியாலயம் - மத்துகம
9. மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் - ஹோமாகம
10. டீ. எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலை - கொழும்பு 7

**தென் மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. மஹிந்த கல்லூரி - காலி
2. ரிச்மண்ட் கல்லூரி - காலி
3. சிரிதம்ம கல்லூரி - காலி
4. ராகுல் கல்லூரி - மாத்தறை
5. விஜித மத்திய மகா வித்தியாலயம் - திக்வெல்ல
6. தெனியாய மத்திய மகா வித்தியாலயம் - தெனியாய
7. ஹரபா மத்திய மகா வித்தியாலயம் - வெலிகம
8. சஹிரா முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் - ஹம்பாந்தோட்டை
9. தெலின்ஜவில மத்திய மகா வித்தியாலயம் - தெலின்ஜவில
10. மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் - மாத்தறை
11. ராஜபக்ஷ வித்தியாலயம் - அம்பாந்தோட்டை

**மத்திய மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. தர்மராஜ கல்லூரி - கண்டி
2. கிங்ஸ்வூட் கல்லூரி - கண்டி
3. விக்கிரமபாகு மத்திய மகா வித்தியாலயம் - கம்பளை
4. வலபன ஸ்ரீ சுமங்கல மத்திய மகா வித்தியாலயம் - நில்தண்டாஹின்ன
5. பொரமடுல்ல மகா வித்தியாலயம் - ரிகில்லகஸ்கட
6. தம்புல்ல மத்திய மகா வித்தியாலயம் - தம்புல்ல
7. நுகவெல மத்திய மகா வித்தியாலயம் - நுகவெல

**ஊவா மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. பஸ்ஸர மத்திய மகா வித்தியாலயம் - பஸ்ஸர
2. கன்தேகெதர மத்திய மகா வித்தியாலயம் - ஹாலிஎல
3. வெலிமட மகா வித்தியாலயம் - வெலிமட
4. மஹாநாம மத்திய மகா வித்தியாலயம் - மொனராகல
5. மல்வத்தாவல மத்திய மகா வித்தியாலயம் - வெல்லவாய

**வடமேல் மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. அல் அக்ஷா தேசிய பாடசாலை - கற்பிட்டி
2. மலியதேவ கல்லூரி - குருநாகல்
3. இப்பாகமுவ மத்திய மகா வித்தியாலம் - இப்பாகமுவ
4. மயூரபாத மத்திய மகா வித்தியாலயம் - நாரம்மல
5. சதலங்காவ மத்திய மகா வித்தியாலயம் - சதலங்காவ
6. விஜயபா மத்திய மகா வித்தியாலயம் - மஹவ
7. குளியாப்பிட்டிய மத்திய மகா வித்தியாலயம் - குளியாப்பிட்டி
8. சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயம் - மாதம்பே
9. கெகுனகொல்ல மத்திய மகா வித்தியாலயம் - கெகுனகொல்ல

**கிழக்கு மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. கிண்ணியா மத்திய மகா வித்தியாலயம் - கிண்ணியா
2. டீ. எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலை - அம்பாறை
3. தெஹிஅத்தகண்டிய தேசிய பாடசாலை - அம்பாறை
4. அல் அஸ்ரக் மத்திய மகா வித்தியாலயம் - நிந்தவூர்
5. காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம் - காத்தான்குடி
6. அக்கரைப்பற்று மத்திய மகா வித்தியாலயம் - அக்கரைப்பற்று
7. சாஹிரா கல்லூரி - கல்முனை
8. புனித ஜோசப் கல்லூரி - திருகோணமலை

**வட மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. யாழ். மத்திய மகா வித்தியாலயம் - யாழ்ப்பாணம்
2. யாழ். இந்துக் கல்லூரி - யாழ்ப்பாணம்
3. சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி - மன்னார்
4. வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் - வவுனியா
5. மானிப்பாய் இந்துக் கல்லூரி - யாழ்ப்பாணம்
6. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் - கரவெட்டி

**சப்ரகமுவ மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. சீவலி மத்திய மகா வித்தியாலயம் - இரத்தினபுரி
2. கரவிட மத்திய மகா வித்தியாலயம் - உடகரவிட
3. பின்னவல மத்திய மகா வித்தியாலயம் - ரம்புக்கன
4. டட்லி சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயம் - தோலங்கமுவ
5. ரிவிசந்த மத்திய கல்லூரி - உஸ்ஸாபிட்டிய
6. ராஜசிங்க மத்திய மகா வித்தியாலயம் - ருவன்வெல்ல

**வடமத்திய மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. அநுராதபுர மத்திய மகா வித்தியாலயம் - அநுராதபுரம்
2. றோயல் மத்திய மகா வித்தியாலயம் - பொலன்னறுவை
3. சாஹிரா முஸ்லிம் கல்லூரி - அநுராதபுரம்
4. கெக்கிராவ மத்திய மகா வித்தியாலயம் - கெக்கிராவ
5. மைத்திரிபால சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயம் - மதவாச்சி

**வெற்றிடம் காணப்படும் தேசிய பாடசாலை - உதவி வதிவிட நிருவாக பதவி (பெண்)**

**மேல் மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. ஹங்வெல்ல ராஜசிங்க மகா வித்தியாலயம் - ஹங்வெல்ல
2. தேவி மகளிர் கல்லூரி - கொழும்பு 8
3. விசாகா கல்லூரி - கொழும்பு 4
4. முஸ்லிம் மகளிர் கல்லூரி - கொழும்பு 4
5. ஆனந்த மகளிர் கல்லூரி - கொழும்பு 10
6. வெயன்கொட பண்டாரநாயக்க மத்திய மகா வித்தியாலயம் - வெயன்கொட
7. நிவ்ஸ்டன் மகளிர் கல்லூரி - நீர்கொழும்பு
8. தக்ஷிலா கல்லூரி - ஹொரணை
9. சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மத்திய மகா வித்தியாலயம் - மத்துகம
10. மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் - ஹோமாகம
11. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மகளிர் கல்லூரி - கொழும்பு 7
12. அளுத்கம பாதை முஸ்லிம் மகளிர் கல்லூரி - அளுத்கம

**தென் மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. ரிப்பன் மகளிர் கல்லூரி - காலி
2. சவுத்லன் கல்லூரி - காலி
3. சிரிதம்ம கல்லூரி - காலி
4. கிறிஸ்து தேவ மகளிர் கல்லூரி - பத்தேகம
5. சுஜாதா கல்லூரி - மாத்தறை
6. அரபா மத்திய மகா வித்தியாலயம் - வெலிகம
7. விஜித மத்திய மகா வித்தியாலயம் - திக்வெல்ல
8. தெலிஜ்ஜவில மத்திய மகா வித்தியாலயம் - தெலிஜ்ஜவில
9. தெனியாய மத்திய மகா வித்தியாலயம் - தெனியாய
10. ராஜபக்ஷ வித்தியாலயம் - அம்பாந்தோட்டை
11. சஹிரா முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் - அம்பாந்தோட்டை
12. மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் - மாத்தறை
13. சங்கமித்தா மகளிர் கல்லூரி - காலி

**மத்திய மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. உயர் மகளிர் கல்லூரி - கண்டி
2. மஹாமயா மகளிர் கல்லூரி - கண்டி
3. புஸ்பதான் மகளிர் கல்லூரி - கண்டி
4. வலபன ஸ்ரீ சுமங்கல மத்திய மகா வித்தியாலயம், நில்தண்டாஹின்ன
5. பொரமடுல்ல மகா வித்தியாலயம் - ரிகில்லகஸ்கட
6. தம்புல்ல மத்திய மகா வித்தியாலயம் - தம்புல்ல
7. விக்கிரமபாகு மத்திய மகா வித்தியாலயம் - கம்பஹா
8. நுகவெல மத்திய மகா வித்தியாலயம் - நுகவெல
9. சங்கமித்தா மகளிர் கல்லூரி - மாத்தளை

**ஊவா மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. டீ. எஸ். சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயம் - கன்தேகெடிய
2. விசாகா மகளிர் கல்லூரி - பண்டாரவெல
3. குடாகுசும் மகளிர் கல்லூரி - பண்டாரவெல
4. வெலிமட மகா வித்தியாலயம் - வெலிமட
5. மஹாநாம மத்திய மகா வித்தியாலயம் - மொனராகலை
6. வெல்லஸ்ஸ மத்திய மகா வித்தியாலயம் - பிபில
7. பஸ்ஸர மத்திய மகா வித்தியாலயம் - பஸ்ஸர
8. கந்தகெதர மத்திய மகா வித்தியாலயம் - ஹாலிஎல
9. மல்வத்தாவல மத்திய மகா வித்தியாலயம் - வெல்லவாய

**கிழக்கு மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. வின்சன்ட் மகளிர் கல்லூரி - மட்டக்களப்பு
2. தெஹிஅத்தகண்டிய தேசிய பாடசாலை - அம்பாறை
3. புனித மரியாள் தேசிய பாடசாலை - திருகோணமலை
4. டீ. எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலை - அம்பாறை
5. அல் அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயம் - நிந்தவூர்
6. காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம் - காத்தான்குடி
7. அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் - அக்கரைப்பற்று
8. சாஹிரா கல்லூரி - கல்முனை

**வடமேல் மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. அல் அக்ஷா தேசிய பாடசாலை - கற்பிட்டி
2. மலியதேவ மகளிர் கல்லூரி - குருணாகலை
3. இப்பாகமுவ மத்திய மகா வித்தியாலயம் - இப்பாகமுவ
4. குடாகுசும் மகளிர் கல்லூரி - கெகுன்கொல்ல
5. சதலங்காவ மத்திய மகா வித்தியாலயம் - சதலங்காவ
6. விஜயபா மத்திய மகா வித்தியாலயம் - மஹவ
7. மஹசென் மத்திய மகா வித்தியாலயம் - நிகவெரட்டிய
8. குளியாபிட்டிய மத்திய மகா வித்தியாலயம் - மாதம்பே
9. சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயம் - மாதம்பே
10. மயுரபாத மத்திய மகா வித்தியாலயம் - நாரம்மல
11. பராக்கிரமபாகு மத்திய மகா வித்தியாலயம் - பொல்காவலை

**வட மாகாணம்**

*தேசிய பாடசாலை*

1. சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி - மன்னார்
2. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - வவுனியா
3. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் - கரவெட்டி

***சப்பிரகமுவ மாகாணம்***

*தேசிய பாடசாலை*

1. பர்கசன் கல்லூரி - இரத்தினபுரி
2. சுமன மகளிர் கல்லூரி - இரத்தினபுரி
3. சீவலி மத்திய மகா வித்தியாலயம் - இரத்தினபுரி
4. கரவிட மத்திய மகா வித்தியாலயம் - உடகரவிட
5. கேகாலை மகளிர் கல்லூரி - கேகாலை
6. பின்னவல மத்திய மகா வித்தியாலயம் - ரம்புக்கன
7. ராஜசிங்க மத்திய மகா வித்தியாலயம் - ருவன்வெல்ல
8. ரிவிசந்த மத்திய மகா வித்தியாலயம் - உஸ்ஸாபிட்டிய
9. டட்லி சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயம் - தோலங்கமுவ

***வடமத்திய மாகாணம்***

*தேசிய பாடசாலை*

1. அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயம் - அநுராதபுரம்
2. கெக்கிராவ மத்திய மகா வித்தியாலயம் - கெக்கிராவ
3. மைத்திரிபால சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயம் - மதவாச்சி
4. ராஜசிய மத்திய மகா வித்தியாலயம் - பொலன்னறுவை
5. சஹிரா முஸ்லிம் கல்லூரி - அநுராதபுரம்
6. ஸ்வர்ணபாலி மகளிர் கல்லூரி, அநுராதபுரம்

இணைப்பு-2

**வெற்றிடம் காணப்படும் தேசிய கல்விக் கல்லூரி - (உதவி மாணவர் வதிவிட பொறுப்பாளர்-பெண்)**

விஞ்ஞான பீடம்

1. பஸ்துன்ரட்ட தேசிய கல்விக் கல்லூரி
2. சியனா தேசிய கல்விக் கல்லூரி
3. யாழ். தேசிய கல்விக் கல்லூரி
4. மஹவெலி தேசிய கல்விக் கல்லூரி
5. நில்வலா தேசிய கல்விக் கல்லூரி
6. ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி
7. ஹாபிடிகம தேசிய கல்விக் கல்லூரி
8. ருவன்புர தேசிய கல்விக் கல்லூரி
9. ருஹுனு தேசிய கல்விக் கல்லூரி
10. அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி
11. வடமேல் தேசிய கல்விக் கல்லூரி
12. வவுனியா தேசிய கல்விக் கல்லூரி
13. தர்கா நகர் தேசிய கல்விக் கல்லூரி
14. மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி
15. ஊவா தேசிய கல்விக் கல்லூரி
16. புலதிசிபுர தேசிய கல்விக் கல்லூரி
17. தம்பதெனிய தேசிய கல்விக் கல்லூரி
18. பேராதனை தேசிய கல்விக் கல்லூரி

**வெற்றிடம் காணப்படும் தேசிய கல்விக் கல்லூரி - (உதவி மாணவர் வதிவிட பொறுப்பாளர்-ஆண்)**

விஞ்ஞான பீடம்

1. பஸ்துன்ரட்ட தேசிய கல்விக் கல்லூரி
2. சியனா தேசிய கல்விக் கல்லூரி
3. யாழ். தேசிய கல்விக் கல்லூரி
4. மஹவெலி தேசிய கல்விக் கல்லூரி
5. நில்வலா தேசிய கல்விக் கல்லூரி
6. ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி
7. ஹாபிடிகம தேசிய கல்விக் கல்லூரி
8. ருவன்புர தேசிய கல்விக் கல்லூரி
9. ருஹுனு தேசிய கல்விக் கல்லூரி
10. அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி
11. வடமேல் தேசிய கல்விக் கல்லூரி
12. வவுனியா தேசிய கல்விக் கல்லூரி
13. மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி
14. ஊவா தேசிய கல்விக் கல்லூரி
15. புலதிசிபுர தேசிய கல்விக் கல்லூரி
16. சாரிபுத்த தேசிய கல்விக் கல்லூரி
17. தம்பதெனிய தேசிய கல்விக் கல்லூரி
18. பேராதனை தேசிய கல்விக் கல்லூரி

6-676

---

**கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு பட வரைஞர் பதவி வெற்றிடம் பொருட்டு ஒரு வருடப் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2014**

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு பட வரைஞர் பதவி வெற்றிடம் பொருட்டு ஒரு வருட பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை.**- இப்பரீட்சை 2014, செத்தெம்பர் மாதம் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற்கு அமைய கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு பூரண அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவை நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு படவரைஞர் பதவியின் ஒரு வருட பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் :

(i) திறந்த ஆட்சேர்ப்பு செய்யும் முறையின்கீழ் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர் சேவைக்கு உரிய பாடத்திட்டத்திற்கு அமைய பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு

வருட கோட்பாட்டு மற்றும் செயன்முறை பயிற்சியை வெற்றி கரமாக முடிவுறுத்தி உரிய பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் III ஆம் தரத்தின் சம்பளத்திட்டத்தின் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவர்.

(ii) அவ்வாறு III ஆம் தரத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர், மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் நியமனம் உறுதிப்படுத் தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பதில் கடமை காலப் பகுதிக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பு முறையின்கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர், விதித்துரைத்த முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iii) பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோ கத்தர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப் புரைக்கும், தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும், நிதிப்பிரமாணத்திற்கும், நடைமுறை ஒழுங்குவிதிக்கும், அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

*4. **சம்பளத் திட்டம்**.-* எம்என்-3-2006ஏ-படவரைஞர் III ஆம் தரம் ரூபா 15,005-4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - 27,885. (பொ. நி. சு. 07/2008 இற்கு அமைய மாதாந்தம்) இச்சம்பளத் திட்டத்தில் ரூபா 15,005-4X180-6X240-17,165. சம்பளப் படிமுறைகள் இத்தரத்திற்கு உரியதாகும். III ஆம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத் திட்டத்தின் மூன்றாம் சம்பள ஏற்றத்தை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

பயிற்சித் தரத்திற்கான கொடுப்பனவு பொ. நி. சுற்றறிக்கை 6/2006 (II) இற்கு அமைய-

1 ஆம் வருடம் - 12,920 ரூபா

2 ஆம் வருடம் - 13,040 ரூபா

5. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

*6. **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்** :*

*கல்வித் தகைமைகள்.-* துறைக்கு உரிய பாடங்களான இணைந்த கணிதம், பௌதீக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம் போன்ற பாடங்களுள் இரண்டு பாடங்கள் உட்பட விஞ்ஞான/கணித பாடப்பரப்பிற்கு உரிய பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் ;

அத்துடன்

சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

*தொழிற் தகைமை.-* மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப பாடசாலை ஒன்றில் இருந்து பட வரைஞர்கள் தொடர்பான ஒரு வருட முழுநேரப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழை வழங்குகின்ற நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகலவிதத்திலும் சமமானது என மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். (விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாகின்றபோது உரிய சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும்).

*உடற்தகைமை.-* பதவியில் கடமையை மேற்கொள்வதற்கு போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டவராக இருப்பதுடன், உடற்றகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

*ஏனைய தகைமைகள் :*

(i) சகல விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சகல விண்ணப்பதாரரும் சிறந்த குணவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(iii) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு போட்டிப் பரீட்சை அமருவதன் பொருட்டு தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பது என ஏற்றுக் கொள்வது விண்ணப்பதாரர் உரிய சகல தகைமைகள் மற்றும் உரிய வயதெல்லை என்பவற்றை விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் திகதி அன்று சகலவிதத்திலும் தகைமைகளைப் பூர்த்தி செய்து இருந்தால் மாத்திரமேயாகும்.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை என்பவற்றின் பெறுபேற்றிற்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையோர் தெரிவுசெய்யப்படுவர்.

*எழுத்துமூலப் பரீட்சை.-* இப்பரீட்சை வினாப்பத்திரம் 2 இனைக் கொண்டமைந்ததாகும் :

| பாடங்கள் | நேரம் | உச்சப் புள்ளி அளவு | சித்தி எய்தும் புள்ளி |
|---|---|---|---|
| 1. மதிநுட்பப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் விடயதான பரீட்சை) | 1 மணித்தியாலம் | 100 | 40 |

*8.* ***பரீட்சை.***- (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பதாரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) விண்ணப்பித்த மொழிமூலத்தை பரீட்சையின்போது எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் 400 ரூபா.

(v) கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு வழங்கப்படுகின்ற பேராதனையில் அமைந்துள்ள தபால் அலுவலகத்தில் மாற்றத்தக்கவாறு பெற்றுக் கொள்ளப்பட்ட காசுக் கட்டளையினை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(vi) பாடத்திட்டம் :

(அ) மதிநுட்பப் பரீட்சை.- இதில் விண்ணப்பதாரர் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப் பட்டிருக்கும்.

(ஆ) பொதுப் பரீட்சை.- (தொழில்நுட்பம் மற்றும் விடயதான பரீட்சை) :

1. கணிதம் - கணித அறிவினைப் பரீட்சிப்பதற்கான ஆரம்ப அறிவு மற்றும் செயன்முறை :

   * மெற்றிக் அலகு, தர நிர்ணய அலகு மாற்றம்
   * நீளம், பரப்பளவு, கனவளவு, கொள்ளளவு தொடர்பான அளவீடு
   * பொதுவான விகிதாசாரத்தை அளவீடு செய்தல்
   * தரப்பட்டுள்ள நேர்கோடுகளின் எண்ணிக் கைக்கு அமைய சமனான அல்லது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பகுதி களாக்குதல்.

2. அளவிடை எடுத்தல்.- மாதிரி பட வரைவுகளில் வழங்கப்படுகின்ற கட்டடம் மற்றும் ஏனைய சாதாரண கட்டமைப்புகளுக்கான அளவிடைகளை எடுத்தல்.

3. ஆரம்ப கட்டட நிர்மாண நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு :

   * அத்திவாரம், சுவர், கட்டமைப்பு பகுதி, கூரை, சிவிலின், கதவு மற்றும் யன்னல், நில மற்றும் சுவர் முடிவுறுத்தல் நடவடிக்கைகளின் பொருட்டு கட்டட நிர்மாண வேலைகளில் பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்கள்
   * வேலைத்தள (Sight Management) முகாமை மற்றும் தரக்கட்டுப்பாடு
   * வேலைத்தள பணிமனையில் பராமரிக்கப்பட்ட வேண்டிய ஆவணங்கள்

4. நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு :

   * நீர் வழங்கல் (நீர் மூலம், குழாய்க்கிணறு மூலப்பொருள் மற்றும் பயன்படுத்தப்படுகின்ற காற்றாடி, தேவையான சகல காற்றாடிகள் உட்பட நீர்க்குழாய் ஒட்டல்)
   * கழிவு நீர்/நீர் கொண்டு செல்லல் (ஒழுங்கு விதிகள், நீர் கொண்டு செல்லல் காற்றாடி, மலசலகூட போச்சி (commode), பொறி (trap), ஜலதாரை (Gully), காற்றோட்டம், சாக்கடை வாயிற் புழை (manhole) ஏனைய வெளி யேற்றல்கள் வரை

*9.* ***விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய முறை.***- இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/2" x 12" அளவிலான ஏ4 கடதாசியில் இரு பக்கங்களையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2014.07.14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப் படுதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பட வரைஞர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.**- (i) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளினையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்பும்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. பரீட்சை நடாத்தப்படும் திகதி செய்திப் பத்திரிகையில் அறிவிக்கப்படும். விண்ணப்பதாருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொள்ளவும் :

(அ) விண்ணப்பகாரரது முழுப்பெயர் ;
(ஆ) முகவரி ;
(இ) விண்ணப்பம் அனுப்பிய திகதி, பதிவு இலக்கம், தபால் அலுவலகம்.

*10.* விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களின் நிழற்படப்பிரதி யினை (Photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ஆ) கல்வி/ தொழிற் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பதாரரது ஆளடையாளம்.**- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடை

யாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வருவனவற்றில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு (பரீட்சைத் தினத்திற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்).

***பிழையான தகவல்களை வழங்குதல்.***- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய பரீட்சார்த்த தகைமையினை இரத்துச்செய்யப்பட இடமுண்டு. விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழை யானது எனத் தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையில் நின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமான பத்திரிகையில் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்தகர்களுக்கான விதிகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றின்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினைப் பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

(டாக்டர்) டபிள்யூ. கே. டி. சில்வா,
பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்.

கால்நடைவள உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்,
பேராதனை,
2014, யூன் 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

***கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்***

*இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு படவரைஞர் பதவி வெற்றிடம் பொருட்டு ஒரு வருட பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் - 2014*

[ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக)

1. பெயர் :
 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.
 (உதாரணம் : SILVA, B.A.)
 1.2 முழுப்பெயர் (தமிழில்) :----.
 1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. முகவரி :
 2.1 தனிப்பட்ட :----.
 2.2 அலுவலக :----.
 2.3 தபால் முகவரி :----.

3. 3.1 பால் :

ஆண் [ ]
பெண் [ ]

(உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

 3.2 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

 3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது-

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

 3.4 குடியியல் நிலை :

விவாகமானவர் [ ]
விவாகமாகாதவர் [ ]

(உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

4. கல்வித் தகைமைகள் :
 4.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை-
 வருடம் :----.
 மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

 4.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை-
 வருடம் :----.
 மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

*4.3* (அ) தொழிற்தகைமை பெறப்பட்ட நிறுவனம் :----.
(ஆ) தொழிற்தகைமை பெற்ற திகதி :----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகத்தின் பெயர் :----. காசுக்கட்டளை இலக்கம் :----.

பரீட்சைக் கட்டணமாக 400 ரூபாவை தீவின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு மாற்றக்கூடிய தபால் அலுவலகம், பேராதனை.
பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப் படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்களத் தலைவரினது சான்றிதழ் :**

இத்திணைக்களத்தில் ................................................... கடமை மேற்கொள்கின்ற திரு./ திருமதி/ செல்வி .................................... என்பவரால் தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும், அவை சரியானது எனவும், இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை).

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

*6-681*

**கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2014**

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2.* **பரீட்சை.**- இப்பரீட்சை 2014, செத்தெம்பர் மாதம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச்செய்வதற்கும் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

*3.* **சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :

(i) நியமனம் பெறும் உத்தியோகத்தர் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவார் என்ற நிபந்தனையின் பேரிலேயே நியமிக்கப்படுவர்.

(ii) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பதில் கடமை காலப் பகுதிக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பு முறையில் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் விதித்துரைத்த முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்ந்துகொண்ட அரச கரும மொழிக்கு மேலாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை, சேவையில் சேர்ந்து 5 வருடத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(v) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கும் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

*4. **சம்பளத் திட்டம்**.- MT-3-2006A-கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரம் ரூபா 15,005-4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885. (பொ. நி. சு. 07/2008 இற்கு அமைய மாதாந்தம்) இச்சம்பளத் திட்டத்தில் ரூபா 15,005-4x180-6x240-ரூபா 17,165. சம்பளப் படிமுறைகள் இத்தரத்திற்கு உரியதாகும். வகுப்பு III இல் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத் திட்டத்தின் மூன்றாம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.*

5. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 18 இற்கு குறையாமலும் 30 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

*6. **கல்வி மற்றும் தொழில் தகைமைகள்**.- கல்வித் தகைமை.-* இரசாயன விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடக்கப்பட்டு விஞ்ஞான/கணித துறைக்குரிய பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

*தொழிற் தகைமைகள்.-* மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பப் பாடசாலை ஒன்றில் இருந்து வழங்கப்படும் இரு வருட கால, கால்நடை வளர்ப்பு டிப்ளோமா தொடர்பான சான்றிதழை பெற்றிருத்தல் ;

அல்லது

கால்நடை வளர்ப்பு துறைக்கு உரிய தேசிய தொழிற்பயிற்சித் தகைமை (NVQ) 6 மட்டத்தின் தகைமைகளை பூரணப்படுத்தி இருத்தல்.

அல்லது

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழை வழங்குகின்ற நிறுவனத்திடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகலவிதத்திலும் சமமானது என மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சகல தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டியதுடன் பெறுபேறுகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

*உடற்தகைமை.-* பதவியில் கடமையை மேற்கொள்வதற்கு போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டவராக இருப்பதுடன், உடற்தகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப் படல் வேண்டும்.

*ஏனைய தகைமைகள் :*

(i) சகல விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சகல விண்ணப்பதாரரும் சிறந்த குணவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(iii) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு போட்டிப் பரீட்சைக்கு அமருவதன் பொருட்டு தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பது என ஏற்றுக்கொள்வது விண்ணப்பதாரர் உரிய சகல தகைமைகளையும் மற்றும் உரிய வயதெல்லை என்பவற்றை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் திகதி அன்று சகலவிதத்திலும் தகைமைகளைப் பூர்த்திசெய்து இருந்தால் மாத்திரமேயாகும்.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை என்பவற்றின் பெறுபேற்றிற்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையோர் தெரிவுசெய்யப்படுவர்.

*எழுத்துமூலப் பரீட்சை.-* இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரத்தைக் கொண்டமைந்ததாகும் :

| பாடங்கள் | நேரம் | உச்சப் புள்ளி அளவு | சித்தி எய்தும் புள்ளி |
|---|---|---|---|
| 1. மதிநுட்பப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் விடயதான பரீட்சை) | 1 மணித்தியாலம் | 100 | 40 |

*8. **பரீட்சை**.-* (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பதாரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) விண்ணப்பித்த மொழிமூலத்தை பரீட்சையின்போது எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் 400 ரூபா.

(v) கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு வழங்கப்படுகின்ற பேராதனையில் அமைந்துள்ள தபால் அலுவலகத்தில் மாற்றத்தக்கவாறு பெற்றுக் கொள்ளப்பட்ட காசுக் கட்டளையினை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும்.

(vi) *பாடத்திட்டம் :*

*(அ) மதிநுட்பப் பரீட்சை.-* இதில் விண்ணப்பதாரர் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப் பட்டிருக்கும்.

(ஆ) பொதுப் பரீட்சை.- (தொழில்நுட்ப மற்றும் விடயதான பரீட்சை).-

(i) இலங்கையில் விவசாய மற்றும் கால்நடைத்துறைக்குக் கிடைக்கப்பெறும் வளங்கள் அதன் சிறப்பம்சங்கள், தற்போதைய நிலைமை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள்.

(ii) இலங்கை கால்நடை உற்பத்தித் துறையில், உற்பத்தி அளவு மற்றும் சந்தைப்படுத்தல் முறைமை, கால்நடை வளர்ப்பின் பங்கு, அவற்றின் இட அமைவு மற்றும் பரம்பல்.

(iii) பண்ணை விலங்குகளின் இனப்பெருக்கத்தின் பொருட்டு பயன்படுத்தப்படும் முறைகள்.

(iv) தொற்றும் விலங்கு நோய்கள், விலங்கு நோய்களின் ஒழிப்பு, நோயுற்ற விலங்குகளின் எச்சங்களைச் சேகரித்தல் மற்றும் கொண்டு செல்லுதல்.

(v) ஒன்றிணைந்த பண்ணை முறைமையின் மீள் பயன்பாட்டு முறைகள்.

(vi) கால்நடை வளர்ப்பு மற்றும் அது சார்ந்த கைத்தொழில், பால் தயாரிப்பு, இறைச்சி தயாரிப்பு, கால்நடை உணவு உற்பத்தி.

(vii) கால்நடை வளர்ப்பு செயன்முறையுடன் தொடர்புற்ற வருமான செலவினங்களைக் கணிக்கும் ஒழுங்கு முறை, கணக்குப் பகுப்பாய்வு, விலங்குப் பண்ணைத் திட்டம்.

(viii) விஞ்ஞான ரீதியான தகவல்களைப் பரப்புதல், அவற்றின் ஆக்கத்திறன் தொடர்புற்ற முறைகளின் பிரயோகம்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய முறை**.- (i) இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/2" x 12" அளவிலான ஏ4 கடதாசியில் இரு பக்கங்களையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2014.07.14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப் படுதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- (i) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளினையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்பும்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. பரீட்சை நடாத்தப்படும் திகதி பத்திரிகையில் அறிவித்தல் மூலம் விளம்பரப்படுத்தப்படும். விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை, உற்பத்தி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொள்க :

(அ) விண்ணப்பதாரரது முழுப்பெயர் ;

(ஆ) முகவரி ;

(இ) விண்ணப்பம் தபாலிட்ட திகதி, பதிவு இலக்கம், தபால் அலுவலகம்

10. விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களின் நிழற்படப்பிரதியினை (Photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பதாரரது ஆளடையாளம்**.- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வருவன வற்றிலொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு.

**பிழையான தகவல்களை வழங்குதல்**.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய பரீட்சார்த்த தகைமையினை இரத்துச்செய்ய இடமுண்டு. விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது என தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையில் நின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமான பத்திரிகையில் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்தகர்களுக்கான விதிகள் அறிவுறுத்தல்கள் என்பவற்றின்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினைப் பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பிலும் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் எண்ணிக்கை தொடர்பிலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

(டாக்டர்) டபிள்யூ. கே. டி. சில்வா,
பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
பேராதனை,
2014, யூன் 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்**

*இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2014*

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04

(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)

1. பெயர் :
   1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.
   (உதாரணம் : SILVA, B.A.)
   1.2 முழுப்பெயர் (தமிழில்) :----.
   1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2. முகவரி :
   2.1 தனிப்பட்ட :----.
   2.2 அலுவலக :----.
   2.3 தபால் முகவரி :----.

3. 3.1 பால் :

ஆண்
பெண்

(உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது-

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

3.4 குடியியல் நிலை :

விவாகமானவர்
விவாகமாகாதவர்

(உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

4. கல்வித் தகைமைகள் :
   4.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை-
   வருடம் :----.
   மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை-
வருடம் :----.
மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.3 (அ) தொழிற்தகைமை பெறப்பட்ட நிறுவனம் :----.
(ஆ) தொழிற்தகைமை பெற்ற திகதி :----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகத்தின் பெயர் :----.
காசுக்கட்டளை இலக்கம் :----.

பரீட்சைக் கட்டணமாக 400 ரூபாவை தீவின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு மாற்றக்கூடிய தபால் அலுவலகம், பேராதனை.
பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்களத் தலைவரினது சான்றிதழ் :**

இத்திணைக்களத்தில் ................................................ கடமை மேற்கொள்கின்ற திரு./திருமதி/செல்வி .................................... என்பவரால் தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும், அவை சரியானது எனவும், இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை).

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

6-682/1

---

## கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2014

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை.**- இப்பரீட்சை 2014, செத்தெம்பர் மாதம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச்செய்வதற்கும் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக ஆராய்ச்சி உதவியாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் :

(i) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப் படுவார் என்ற நிபந்தனையின் பேரிலேயே உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார்.

(ii) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது, விதவை அநாதை ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புத் தொகையை செலுத்த வேண்டும்.

(iii) ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பதில் கடமை காலப் பகுதிக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பு முறையில் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர், விதித்துரைத்த முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்ந்துகொண்ட அரச கரும மொழிக்கு மேலாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை, சேவையில் சேர்ந்து 5 வருடத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(v) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கும் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. **சம்பளத் திட்டம்.**- MN-3-2006A-ஆராய்ச்சி உதவியாளர் பதவியின் III ஆம் தரத்தின் ரூபா 15,005-4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885. (பொ. நி. சு. 07/2008 இற்கு அமைய மாதாந்தம்) இச்சம்பளத் திட்டத்தில் ரூபா 15,005-4x180-6x240-17,165. சம்பளப் படிமுறையும் இத்தரத்திற்கு உரியதாகும். III ஆம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத் திட்டத்தின் மூன்றாம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

5. **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 18 இற்கு குறையாமலும் 30 இற்கு விஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள், தொழில் மற்றும் ஏனைய தகைமைகள்.**- கல்வித் தகைமைகள்.-

க. பொ. த. (உ. தரப்) பரீட்சையில் இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களுள் இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானம்/கணித பாடப்பரப்பிற்கு உரிய பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (சா. தர) ப் பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

*தொழிற் தகைமை*.- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற இரு வருட கால்நடை வளர்ப்பு டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கால்நடை வளர்ப்பு துறைக்கு உரிய தேசிய தொழிற்பயிற்சித் தகைமை (NVQ) 6 மட்டத்தின் தகைமைகளை பூரணப்படுத்தி இருத்தல்.

அல்லது

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழை வழங்குகின்ற நிறுவனத்திடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகலவிதத்திலும் சமமானது என மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சகல தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டியதுடன் பெறுபேறுகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*உடற்தகைமை*.- பதவியில் கடமையை மேற்கொள்வதற்கு போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டவராக இருப்பதுடன், உடற்றகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப் படல் வேண்டும்.

*ஏனைய தகைமைகள் :*

(i) சகல விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சகல விண்ணப்பதாரரும் சிறந்த குணவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(iii) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு போட்டிப் பரீட்சைக்கு அமருவதன் பொருட்டு தேவையான தகைமை களைக் கொண்டிருப்பது என ஏற்றுக்கொள்வது விண்ணப்ப தாரர் உரிய சகல தகைமைகளையும் மற்றும் உரிய வயதெல்லை என்பவற்றை விண்ணப்பம் கோரல் அறிவித் தலில் குறிப்பிடப்படும் இறுதித் திகதி அன்று சகலவிதத்திலும் தகைமைகளைப் பூர்த்திசெய்து இருந்தால் மாத்திரமேயாகும்.

**7. ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை என்பவற்றின் பெறுபேற்றிற்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையோர் தெரிவுசெய்யப்படுவர்.

*எழுத்துமூலப் பரீட்சை*.- இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரத்தைக் கொண்டமைந்ததாகும் :

| பாடங்கள் | நேரம் | உச்சப் புள்ளி அளவு | சித்தி எய்தும் புள்ளி |
|---|---|---|---|
| 1. மதிநுட்பப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் விடய விதான பரீட்சை) | 1 மணித்தியாலம் | 100 | 40 |

**8. பரீட்சை**.- (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பதாரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) விண்ணப்பித்த மொழிமூலத்தை பரீட்சையின்போது எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் 400 ரூபா.

(v) கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு வழங்கப்படுகின்ற பேராதனையில் அமைந்துள்ள தபால் அலுவலகத்தில் மாற்றத்தக்கவாறு பெற்றுக் கொள்ளப்பட்ட காசுக் கட்டளையினை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும்.

(vi) பாடத்திட்டம் :

(அ) மதிநுட்பப் பரீட்சை.- இதில் விண்ணப்பதாரர் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப் பட்டிருக்கும்.

(ஆ) தொழில்நுட்பவியல் :

(i) ஆய்வுகூட உபகரணங்களை இனங்காணுதலும் அவற்றினை பராமரித்தலும் ;
(ii) நோயைக் கண்டறியும் பொருட்டு செய்யப்படவேண்டிய ஆய்வு முறைகள் :
நோயியல் (Pathology)
ஒட்டுண்ணியியல் (Parasitology)
நுண்ணுயிரியல் (Microbiology)
நீர்ப்பாயவியல் (Serology)
போஷணை (Nutrition)
(iii) தரத்தினை நிர்ணயிக்க மேற்கொள்ளப்படும் ஆய்வு முறைகள் :
பௌதீகப் பரிசோதனை
இரசாயனப் பரிசோதனை
புலன் பரிசோதனை
(iv) ஆய்வுகூடத்தை கவனமாகப் பேணுதல், கிருமி அழித்தல்.
(v) மாதிரி பெற்றுக்கொள்ளல், களஞ்சியப்படுத்தல், கொண்டுசெல்லல்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய முறை.**- (i) இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 8 1/2" x 12" அளவிலான ஏ4 கடதாசியில் இரு பக்கங்களையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2014.03.14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெடம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப் படுதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.**- (i) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப் பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளினையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்பும்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. பரீட்சை நடாத்தப்படும் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் விளம்பரப்படுத்தப்படும். விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொள்க :

(அ) விண்ணப்பகாரரது முழுப்பெயர் ;
(ஆ) முகவரி ;
(இ) விண்ணப்பம் தபாலில் அனுப்பிய திகதி, பதிவு இலக்கம், தபால் அலுவலகம்.

10. விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களின் நிழற்படப்பிரதி யினை (Photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பதாரரது ஆளடையாளம்.**- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத் தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு (பரீட்சைத் தினத்திற்கு முன்னர் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

**பிழையான தகவல்களை வழங்குதல்.**- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப் பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்பத் தகைமையினை இரத்துச்செய்ய இடமுண்டு. விண்ணப்ப தாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது எனத் தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையிலிருந்து நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமான பத்திரிகையில் 3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்தகர்களுக்கான விதிகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றின்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினைப் பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பில் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை தொடர்பிலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை, உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

(டாக்டர்) டபிள்யூ. கே. டி. சில்வா,
பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்.

கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்,
பேராதனை,
2014, யூன் 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2014

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04 [ ]
(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)

1. பெயர் :
 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.
 (உதாரணம் : SILVA, B.A.)
 1.2 முழுப்பெயர் (தமிழில்) :----.
 1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. முகவரி :
 2.1 தனிப்பட்ட :----.
 2.2 அலுவலக :----.
 2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :----.

3. 3.1 பால் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது-

வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

3.4 குடியியல் நிலை :

விவாகமானவர் [ ]

விவாகமாகாதவர் [ ]

(உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை-
வருடம் :----.
மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை-
வருடம் :----.
மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.3 (அ) தொழிற்தகைமை பெற்ற நிறுவனம் :----.
(ஆ) தொழிற்தகைமை பெற்ற வருடம் :----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் பணிமனையின் பெயர் :----.
காசுக்கட்டளை இலக்கம் :----.

> பேராதனை தபாலகத்தில் மாற்றக்கூடியதாக பரீட்சைக் கட்டணம் 400 ரூபாவை தீவின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பேரில் செலுத்த முடியும். பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்வதற்கு முன் தெரியவரின் நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியவருமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்களத் தலைவரினது சான்றிதழ் :**

இத்திணைக்களத்தில் ................................................ கடமை மேற்கொள்கின்ற திரு./ திருமதி/ செல்வி ................................... என்பவரால் தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும், அவை சரியானது எனவும், இவ் அலுவலர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுப் படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை).

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

6-682/2

---

திருத்தம்

**மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு**

அரசாங்க சேவை ஆணைக்குழு

**அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் இலங்கை அச்சீட்டு சேவையின் நிறைவேற்று அலுவலர் தரத்தின் வகுப்பு I தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட /திறந்த போட்டிப் பரீட்சை- 2012**

06.06.2014 ஆந் திகதிய 1866 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிடப் பட்ட தலையங்கத்தின்கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பம் கோரலிற்காக தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் பின்வருமாறு திருத்தப்படல் வேண்டுமென எல்லா விண்ணப்பதாரி களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

உள்ளக விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை இல. 1.0 இலிருந்து இல. 3.11 வரை முதலாம் பக்கத்திலும் இல. 4.0 இலிருந்து

இல. 8.0 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியவை மூன்றாம் பக்கத்திலும் தயாரிக்கப்படல் வேண்டும்.

ஷரித்த ஹேரத்,
செயலாளர்,
மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு.

23.06.2014.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

**அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் இலங்கை அச்சீட்டு சேவையின் நிறைவேற்று பதவி தரத்தின் வகுப்பு I தரம் III இற்கான உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி), உதவி அரசாங்க அழுத்தகர் (பராமரிப்பு - அச்சீட்டு இயந்திரம்), உதவி அரசாங்க அழுத்தகர் (பராமரிப்பு - மின்னியல்), உதவி அரசாங்க அழுத்தகர் (அச்சீட்டு பதிப்பாளர்) ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012**

The Limited Competitive Examination for Recruitment to Executive Service Cardre, Class I Grade III in Printing Service Assistant Government Printer (Production), Assistant Government Printer (Maintenance-Printing Mechanical), Assistant Government Printer (Maintenance-Electronics), Assistant Government Printer (Printing Editor) in the Department of Government Printing - 2012

1. மொழிமூலம் :

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2. 2.1 உங்களால் விண்ணப்பிக்கும் பதவி :

(நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கான இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.) ☐

உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி) 01

உதவி அரசாங்க அழுத்தகர் (பராமரிப்பு - அச்சீட்டு இயந்திரம்) 02

உதவி அரசாங்க அழுத்தகர் (பராமரிப்பு - மின்னியல்) 03

உதவி அரசாங்க அழுத்தகர் (அச்சீட்டு பதிப்பாளர்) 04

2.2 நீங்கள் திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்களை அனுப்புவதற்கு எதிர்பார்த்திருக்கிறீர்களா ? :----.

3. தனிப்பட்ட தகவல்கள் :

3.1 முதலெழுத்துக்களை இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) (SILVA, A. B.) :--------------------------------------
--------------------------------------------------.

3.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----------
--------------------------------------------------.

3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-------------------
--------------------------------------------------.

3.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :--------
--------------------------------------------------.

3.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----------------
--------------------------------------------------.

3.6 பால் (ஆண்/பெண்) :
(ஆண்-0, பெண்-1) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.7 திருமணமானவரா /திருமணமாகாதவரா ?
திருமணமாகாதவர்-1, திருமணமானவர்-2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

3.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.9 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.10 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.11 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. தகைமைகள் பற்றிய தகவல் :

4.1 உங்களால் அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவி, தற்போது சேவையாற்றும் பிரிவு :--------
--------------------------------------------------.

4.2 உங்களால் அச்சீட்டு தொழில்நுட்பம் பற்றி பின்பற்றியுள்ள பாடநெறிகள் மற்றும் பயின்ற நிறுவகங்கள் பற்றிய விபரம் :
--------------------------------------------------
--------------------------------------------------
--------------------------------------------------
--------------------------------------------------
--------------------------------------------------

5. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு :

(பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.)
(பற்றுச்சீட்டின் பிரதியை உங்களுடன் வைத்திருப்பது பிரயோசனமானதாகும்.)

6. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானது எனவும், 26.06.2013 ஆந் திகதிய 1816/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அச்சீட்டு சேவை பிரமாணத்திற்கமைய இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளேன் எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ........................................ ஆந் திகதிய .................................. ஆம் இலக்க பற்றுச்சீட்டை இத்துடன் ஒட்டியுள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய செயற்படுவேன் எனவும் இப்பரீட்சை பற்றிய நிபந்தனைகளுக்கமைய நான் தகைமையற்றவனாவேன் எனத் தெரியவரின், பரீட்சைக்கு முன்னராயின் அல்லது பரீட்சை நடக்கும்பொழுது அல்லது பரீட்சைக்குப் பின்னராயின் எனது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச்செய்யப்படுவதற்குமான ஏதேனும் தீர்மானம் எடுப்பதற்கு இணங்குகின்றேன், மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுபடுத்தல் :**
(அறிவித்தலின் 9(ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற .......................... (முழுப்பெயர்) என்பவர் அரசாங்க அச்சகத்தில் சேவையாற்று கின்றார் எனவும் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி யுள்ளாரெனவும் அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் ................. ஆந் திகதியன்று அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் எனவும் இத்தால் சான்றுபடுத்து கின்றேன்.

----,
கையொப்பத்தை சான்றுபடுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை சான்றுபடுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரையினால் நிரூபித்தல் வேண்டும்.)
திகதி :----.

8. **விண்ணப்பதாரி சேவையாற்றும் பிரிவு பொறுப்பு பணியாட் டொகுதி அலுவலரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பதாரி அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் ............................ பிரிவில் ....................... ஆக பதவி வகிக்கும் அலுவலராக சேவையாற்றுகின்றார் என சான்றுபடுத்தி அவரின் இவ்விண்ணப்பத்தை மேற்கொண்டு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கின்றேன்.

----,
பிரிவு பொறுப்பு பணியாட்டொகுதி
அலுவலர்.

பிரிவு பொறுப்பு பணியாட்டொகுதி அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையில் நிரூபித்தல் வேண்டும்.)
திகதி :----.

9. **தனிப்பட்ட ஆவணக்கோவை பொறுப்பு பணியாட்டொகுதி அலுவலரின் சான்றிதழ் :**

இவ் அலுவலர் 26.06.2013 ஆந் திகதிய 1816/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அச்சீட்டு சேவைப் பிரமாணத்திற்கமைய மேலே குறிப்பிடப்பட்ட 3.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனவும், அவரினால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் திருத்தமானவை எனவும், அவர் ...................................... 2014 ஆந் திகதிக்கு அண்மித்த 05 வருடத்திற்குள் எதுவித ஒழுக்காற்று தண்டனை களுக்கும் ஆட்படவில்லை எனவும் அவ்வாறு தீர்மானிப்பதற்கு எண்ணியிருக்கவில்லை எனவும், மேற்குறிப்பிட்ட திகதிக்கு அண்மித்த ஐந்து வருட காலத்திற்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

----,
தனிப்பட்ட ஆவணக்கோவை பொறுப்பு
பணியாட்டொகுதி அலுவலரின் கையொப்பம்.

தனிப்பட்ட ஆவணக்கோவை பொறுப்பு
பணியாட்டொகுதி அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
(பதவி முத்திரையினால் நிரூபித்தல் வேண்டும்.)
திகதி :----.

6-214

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.